I PU MODEL QUESTION PAPER -1

FOR REDUCED SYLLABUS 2020-21

Subject Code : (04)

TAMIL

Time : 3 Hours 15 Minutes] [Max.Marks : 100

[ Total No of Questions : 50 ]

மாணவர்களின் கவனத்திற்கு :

1. கையெழுத்து தெளிவாகவும் அழகாகவும் இருக்க வேண்டும்.

2. வினாத்தாளில் கொடுக்கப்பட்டுள்ள வினா எண்களை சரியாக எழுத வேண்டும்.

3. கட்டுரை ஒரு பக்க அளவில் இருக்க வேண்டும்

## பகுதி – ஒன்று

I. ஓரிரு வரிகளில் விடை எழுதுக: 1X10=10

1. பாரதியார் நிரந்தரமாய் வாழ்க என்று எதனை வாழ்த்துகிறார்?
2. அன்புடை நெஞ்சங்கள் எவ்வாறு கலந்தன?
3. கல்வி நோயின்மை யாருக்கு வாய்க்கும்?
4. எதனை முருகப்பெருமான் கண்ணகிக்குக் கொடுத்தான்?
5. காலத்தின் அதன்பால் வைத்த அன்பினால் கண்ணப்பன் என்ன செய்தான்?

6. பெண் திருமணத்திற்கு பிறகு எதையெல்லாம் தியாகம் செய்கிறாள்?
7. கன்னட மொழியின் தலைசிறந்த வசனூசிரியர் யார்?
8. மருதாயியின் மங்கிய கண்கள் கண்ட உண்மைகள் யாவை?
9. வீரசிங்கம் பார்வைக்கு எப்படி இருந்தான்?
10. கெளரி பாட்டியின் வயது என்ன?

## பகுதி - இரண்டு

அ எவையேனும் நான்கு வினாக்களுக்கு இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடை எழுதுக: 4X2=8

11. இறைவன் எப்படிப்பட்டவன் என்று தாயுமானவர் கூறுகின்றார்?
12. கபிலர் இயற்றிய அகநானூற்று பாடலில் அமைந்துள்ள உள்ளுறை உவமை பொருளை எழுதுக:
13. விருந்தினரை எவ்வாறு சிறப்பிக்க வேண்டுமென ஆசாரக்கோவை கூறுகிறது?
14. புகழுடம்பு அடைந்தார் பெருமையை, மனோன்மணீயம் ஆசிரியர் எங்ஙனம் கூறியுள்ளார்?
15. எத்தகைய மனிதருக்கு என்றும் இன்பம் கிடைக்கும்?

ஆ எவையேனும் மூன்று வினாக்களுக்கு இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடை எழுதுக: 3X2= 6

16. கோயிலில் இருந்து மக்கள் கடன் பெற்ற விதத்தை எழுதுக:
17. வெள்ளிக்கிழமை விளக்கு வைத்த நேரத்தில் பொன் நகையை வெளியில் கொடுக்கலாமா என்று கூறிய வைதீகருக்கு நகை வியாபாரி கூறியவற்றை எழுதுக:

18. ஆங்கிலேயர்கள் பெரிதும் மகிழ்ச்சி கொள்ளும் விஷயத்தைப் பற்றி எழுதுக:

19. பசவண்ணரின் மனப் போராட்டத்தைக் குறிப்பிடும் வசனத்தை குறிப்பிடுக:

இ எவையேனும் மூன்று வினாக்களுக்கு இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடை எழுதுக : 3X2=6

20. தோட்டி தனக்குத்தானே பேசிக் கொண்டது என்ன ?

21. தான் உழைத்து வளர்த்த செவ்வாழையைப் பார்த்து செங்கோடன் எண்ணியவற்றை எழுதுக:

22. கீதா தனது கடிதத்தில் கௌரிப் பாட்டியைப் பற்றி கூறியுள்ள கருத்தை எழுதுக:

23. சேமலையப்பன் சாப்பிட்டுக் கொண்டு இருந்ததைப் பார்த்ததும் அவருடைய மருமகள் செய்தவற்றை விவரிக்க:

## பகுதி - மூன்று

அ எவையேனும் இரண்டிற்கு இடம் சுட்டிப் பொருள் விளக்கம் எழுதுக: 2X3=6

24. ''என்புதோல் போர்த்த உடம்பு''

25. ''வண்டொடு புக்க மணவாய்த் தென்றல்''

26. ''இது எனதென்னும் ஓர் கொடுமையைத் தவிர்ப்போம்''

ஆ ஏதேனும் ஒன்றிற்கு இடம் சுட்டிப் பொருள் விளக்கம் எழுதுக: 1X3=3

27. அப்பா, ''இன்று இரவு உன் ஊருக்குச் சென்று நாளைக் காலையில் கங்கையாற்றைக் கடப்பதற்கு படகுகள் கொண்டு வருக''

28. ''அவர்கள் தம் கடமைகளில் இருந்து தவறின் தண்டிக்கப்படுவர் என்றும் அறிவிக்கப்பட்டது''

இ ஏதேனும் ஒன்றிற்கு இடம் சுட்டி பொருள் விளக்கம் எழுதுக: 1X3=3

29. ''ஏழைகள் பாக்கியசாலிகள் அவர்கள் பூமியை ஆள்வார்கள்''

30. ''இந்தக் காலத்துப் பிள்ளைகளுக்கு சினிமாவைத் தவிர வேறு ஒன்றும் தெரியாது''

## பகுதி - நான்கு

அ எவையேனும் மூன்றிற்கு ஐந்து அல்லது ஆறு வாக்கியங்களில் விடை எழுதுக: 3X5=15

31. இறைவனின் இயல்புகளாக தாயுமானவர் தெரிவித்துள்ளவை யாவை?

32. அன்புடைமையின் சிறப்பினைத் திருவள்ளுவர் எவ்வாறு விவரித்துள்ளார்?

33. "கண்ணம்மா என் குழந்தை" என்ற பாடலில் கவி சுப்பிரமணிய பாரதியார் கூறியுள்ளவற்றை எழுதுக:

34. ''இசை'' என்ற புதுக்கவிதையில் கவிஞர் மு மேத்தா கூறும் கருத்துக்களை எழுதுக' :

ஆ எவையேனும் இரண்டிற்கு ஐந்து அல்லது ஆறு வாக்கியங்களில் விடை எழுதுக: 2X5=10

35. அதற்குள்ளாகவா காசு மாலை வந்துவிட்டது என்று கேட்ட மகனுக்கு தாயார் கூறியவற்றை எழுதுக:

36. உலகிலேயே அழகிய பகுதி இலண்டன் எணகதாசிரியர் கூறும் செய்திகளை தொகுத்துதெழுதுக:

37. பசவண்ணரின் சிந்தித்து செயல்படும் தன்மையை உதாரணத்துடன் விளக்கி எழுதுக:

இ எதையேனும் இரண்டிற்கு ஐந்து அல்லது ஆறு வாக்கியங்களில் விடை எழுதுக: 2X5=10

38. செவ்வாழையைக் கண்டு செங்கோடன் சந்தோஷம் அடைவதற்கான காரணங்களை விவரித்து எழுதுக:

39. விளக்கு மீண்டும் பிரகாசித்த பொழுது வீரசிங்கம் பேசிய வசனங்களை எழுதுக:

40. மகனின் வயிற்றுப் பசியை எண்ணி சேமலையப்பன் செய்தவற்றை விளக்குக:

## பகுதி - ஐந்து

அ கீழ்காணும் பாடலின் பொருளை எழுதி அணியை விளக்குக: 5

41. ''நோயாளி மடிந்த பிறகு
மருந்து வாங்கி வரும்
ஒரு சொந்தக்காரனை போல்
நீ காலம் கழித்து வராதே!''

ஆ எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை அளிக்க: 4X2=8

42. சேர்த்து எழுதுக:

என் + தந்தை

குடி + பிறப்பாளர்

43. பிரித்து எழுதுக:

திசையெட்டும்

வெள்ளித்தாடி

44. எதிர்ச்சொல் எழுதுக:

நட்பு X

நல்லார் X

45. வாக்கியத்தில் அமைத்து எழுதுக:

ஒழுக்கம்

வாழ்க்கை

46. கீழ்வரும் வாக்கியங்களில் உள்ள எழுத்துப் பிழைகளைத் திருத்தி எழுதுக:

பெண்கல் அலகு மிக்கவர்கல்.

ஆன் குலந்தை பிரந்தது.

## பகுதி – ஆறு

அ கீழ்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று பற்றிக் கட்டுரை வரைக: 1X5=5

47. "எனக்குப் பிடித்த விஞ்ஞானி''.

48. "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்''.

ஆ கீழ்க்காணும் வினாக்களில் ஒன்றிற்கு விடை எழுதுக: 1X5=5

49. உங்கள் தெருவில் மின் விளக்கு அமைக்க வேண்டி ஆணையருக்கு விண்ணப்பக்கடிதம் எழுதுக:

50. ''அரசன் அன்று கொல்வான், தெய்வம் நின்று கொல்லும்'' என்ற பழமொழியை விளக்கி வாக்கியத்தில் அமைத்து எழுதுக:

# I PU MODEL QUESTION PAPER -2

FOR REDUCED SYLLABUS 2020-21

Subject Code : (04)

TAMIL

Time : 3 Hours 15 Minutes] [Max.Marks : 100

[ Total No of Questions : 50 ]

மாணவர்களின் கவனத்திற்கு :

1. கையெழுத்து தெளிவாகவும் அழகாகவும் இருக்க வேண்டும்.

2. வினாத்தாளில் கொடுக்கப்பட்டுள்ள வினா எண்களை சரியாக எழுத வேண்டும்.

3. கட்டுரை ஒரு பக்க அளவில் இருக்க வேண்டும்

## பகுதி – ஒன்று

I. ஓரிரு வரிகளில் விடை எழுதுக: 1X10=10

1. கன்றாகி கதறினார் யார்?
2. சிங்கம் பசியினால் துன்புற்றாலும் எதைக் தின்னாது?
3. கண்ணகியின் மென் நடைக்குத் தோற்றது எது?
4. அவர்கள் ஊர் முழுவதும் எப்படி ஊர்ந்து வந்தனர்?
5. தமிழ்நாட்டு காளத்தி மலையில் தோன்றிய வேடனின் பெயர் என்ன?

6. லண்டனிலிருந்து பாரிசுக்குப் பேருந்தில் செல்ல எத்தனை மணி நேரம் ஆகும்?
7. பழங்கன்னடத்தில் எம்மொழிச் சொற்கள் மிகுந்து காணப்படுகின்றன?
8. பாலு எவ்வளவு நேரம் கனவில் ஆழ்ந்திருந்தான்?
9. கௌரிப் பாட்டி தனது இறந்த காலத்தின் நிகழ்காலப் பிரதிநிதியாக யாரைக் கண்டாள்?
10. மகன் வேலை செய்துகொண்டிருந்த இடத்தை அடைவதற்கு மலையப்பன் எத்தனை மைல் நடந்தார்?

## பகுதி - இரண்டு

அ. எவையேனும் நான்கு வினாக்களுக்கு இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடை எழுதுக: 4X2=8

11. தமிழ்மொழி எப்படித் துலங்கி, தொடங்கி சுடர வேண்டும் என்கிறார் பாரதியார்?
12. குறிஞ்சித் திணை பற்றி விளக்கம் எழுதுக:
13. ஒழுக்கம் பிழையாதவர் அடையும் நன்மைகள் யாவை?
14. புகழுடம்பு அடைந்தார் பெருமையை மனோன்மணியம் ஆசிரியர் எங்ஙனம் கூறியுள்ளார்?
15. எத்தகைய மனிதருக்கு என்றும் இன்பம் கிடைக்கும்?

ஆ. எவையேனும் மூன்று வினாக்களுக்கு இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடை எழுதுக: 3X2=6

16. சுக்ரீவன் சிந்தை தளர்ந்த சூழ்நிலையைக் குறிப்பிட்டு எழுதுக:

17. வைதீகர் இனி இம்மாதிரி செய்ய மாட்டேன் என்று கூறியதற்கானக் காரணங்களை எழுதுக:

18. பெண் நகைச்சுவைக் கட்டுரையாளரைப் பற்றி ராஜம்கிருஷ்ணன் கூறுவது யாது?

19. உலகத்தை ஒரு நாணயச் சாலையோடு ஒப்பிட்டு பசவண்ணர் கூறுவது யாது?

இ. எவையேனும் மூன்று வினாக்களுக்கு இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடை எழுதுக : 3X2=6

20. பாசக்கயிற்றைப் பற்றி மருதாயி கூறியதை எழுதுக:

21. செவ்வாழையைக் கண்டதும் செங்கோடன் என்ன செய்வான்?

22. தமிழ் சினிமாக்களின் நடிகர்களோடு வீர சிங்கத்தை ஒப்பிட்டு வல்லிக்கண்ணன் கூறுவதை எழுதுக:

23. கீதா தனது கடிதத்தில் கௌரி பாட்டியைப் பற்றி கூறியுள்ள கருத்தை எழுதுக:

# பகுதி – மூன்று

அ. எவையேனும் இரண்டிற்கு இடம் சுட்டிப் பொருள் விளக்கம் எழுதுக: 2X3=6

24. ''கன்றாகிக் கதறினாருக்கு சேதா வாகிக்
கடிதினில் வந்து அருள் கூறும் கருணை விண்ணே!''

25. '' வண்டொடு புக்க மணவாய்த் தென்றல்!''

26. ''அன்று முதல் யாழ் வாசிப்பதை நிறுத்தி விட்டாள்''!

ஆ. ஏதேனும் ஒன்றிற்கு இடம் சுட்டிப் பொருள் விளக்கம் எழுதுக: 1X3=3

27. ''அப்பெண்கள் சூலப்பொறி பொறிக்கப்பட்டு, கோயில் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டனர்''
28. ''மகாபாரதம் பெண்நிலை நோக்கில் ஆய்வு செய்தற்கு அரிய காவியமாகும்.''

இ. ஏதேனும் ஒன்றிற்கு இடம் சுட்டி பொருள் விளக்கம் எழுதுக: 1X3=3

29. ''ஏழை சாப்பிட்டாலும் பிரசாதம் தானே''
30. ''ஐயா வீரசிங்கமாக்கும் என்றேன்''

## பகுதி – நான்கு

அ. எவையேனும் மூன்றிற்கு ஐந்து அல்லது ஆறு வாக்கியங்களில் விடை எழுதுக: 3X5=15

31. பாரத நாட்டின் சிறப்புகளாக திரு வி க கூறியுள்ளவற்றை எழுதுக:
32. அன்புடைமையின் சிறப்பினைத் திருவள்ளுவர் எவ்வாறு விவரித்துள்ளார்:
33. "கண்ணம்மா என் குழந்தை'' என்ற பாடலில் கவிசுப்பிரமணிய பாரதியார் கூறியுள்ளவற்றை எழுதுக:
34. ''சட்டம்'' என்ற கவிதையில் கவிஞர் வைரமுத்து கூறும் கருத்துக்களை எழுதுக:

ஆ. எவையேனும் இரண்டிற்கு ஐந்து அல்லது ஆறு வாக்கியங்களில் விடை எழுதுக: 2X5=10

35. என்னென்ன காரணங்களினால் வைதீகர், நகை வேண்டியதில்லை என்று கூறினார்?

36. இலண்டன் மாநகரின் பொதுச்சுகாதாரம் பற்றி எழுதுக:

37. பசவண்ணர் அறநெறியை எவ்வாறு விளக்கியுள்ளார்?

இ. எதையேனும் இரண்டிற்கு ஐந்து அல்லது ஆறு வாக்கியங்களில் விடை எழுதுக: 2X5=10

38. காய்ச்சலால் அவதிப்படும் தன்னுடைய குழந்தையையும் தோட்டியின் மகளையும் ஒப்பிட்டுப் பார்த்து பாலு எண்ணியவற்றை எழுதுக:

39. ''செவ்வாழை'' சிறுகதையின் மூலம் அறிஞர் அண்ணா கூறும் சமுதாயக் கருத்துக்களை எழுதுக:

40. சேமலையப்பனிடமிருந்து தூக்கு போசியை பிடுங்கிக் கொண்ட பிறகு அவளுடைய மருமகள் பேசியவற்றை எழுதுக:

## பகுதி – ஐந்து

அ. கீழ்காணும் பாடலின் பொருளை எழுதி அணியை விளக்குக: 5

41. ''என் ஆசைகளைப்
பாறைமேல் முளைக்கும் பொருட்களைப் போல்
வேகமாக உலர்ந்து போக விடாதே !''

ஆ. எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை அளிக்க: 4X2=8

42. சேர்த்து எழுதுக:

| | | |
|---|---|---|
| இதயம் | + | எல்லாம் |
| நோய் | + | இன்மை |

43. பிரித்தெழுதுக:

கருத்துணர்ந்து =

என்றென்றும் =

44. எதிர்ச்சொல் எழுதுக:

இன்பம் X

நல்லவன் X

45. பொருத்துக:

| | | |
|---|---|---|
| காளத்தி வேடன் | - | மாநகரம் |
| கங்கை வேடன் | - | கம்பர் |
| கவிக்கு நாயகர் | - | கண்ணப்பன் |
| அயோத்தி | - | குகன் |

46. கீழ்காணும் சொற்களில் உள்ள வழுவுச் சொற்களை விரித்து எழுதுக:

நேத்து சாந்திரம் மாமா வூட்டுக்கு வந்தார்.

வீட்ல நாய் கத்தியது. காட்டில் நரி கத்தியது.

## பகுதி - ஆறு

அ. கீழ்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று பற்றிக் கட்டுரை வரைக:

1X5=5

47. பயன் தரும் பொழுதுபோக்குகள்.

48. நான் ஒரு மருத்துவராக இருந்தால்…….

ஆ. கீழ்க்காணும் வினாக்களில் ஒன்றிற்கு விடை எழுதுக:

1X5=5

49. புத்தகக் கண்காட்சிக்கு சென்று வந்த அனுபவம் குறித்து உன் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுதுக:

50. ‘’உயிர் காப்பான் தோழன்’’ - இப் பழமொழியை விளக்கி வாக்கியத்தில் அமைத்து எழுதுக: